பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1981).

இ. பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவையை ஒத்திவைக்கும் முன் சில விவரங்களைப் பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரில் 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 21-3-1981 அன்று பேரவையில் அறிவிக்கப் பெற்றது. அன்று முதல் இன்றோடு சட்டமன்றப் பேரவை கூடிய மொத்த நாட்கள் —41

மாலையிலும் பேரவை நடைபெற்ற நாட்கள் 6

மொத்த நேரம் —210 மணி, 36 நிமிடங்கள்

நிதி அலுவல்கள் — 1981–82.

1.	வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்.	
2.	மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள்	25
3.	நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம்	1

மானியக் கோரிக்கைகள்.

1.	கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்.	3,012
2.	அனுமதிக்கப் பெற்றவை	2,668

3. விவாதிக்கப் பெற்று நிறைவேறிய மானியக் கோரிக்கைகள். 52

4. விவாதிக்கப் பெறாமல் 'கில்லெட்டின்'. ஆனது. 4

5. உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள். 412

எடுத்துக் கொண்ட மொத்த மணி நேரம் 106 மணி 47 நிமிடங்கள்

ஆற்றிய உரைகள் கட்சிவாரியாக விவரம்.

	கட்சிகளின் பெயர்.	உரைகளின் எண்ணிக்கை.	எடுத்துக் கொண்ட நேரம். (நிமிடங்களில்)
1.	அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.	195	2,871
2.	திராவிட முன்னேற்றக் கழகம்.	45	910
3.	இந்திரா காங்கிரஸ்.	46	815
4.	கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)	31	539
5.	கம்யூனிஸ்ட்	33	472
6.	காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ்.	19	234
7.	அனைத்திந்திய பார்வர்ட் பிளாக்.	7	102
8.	தமிழ்நாடு காமராஜ் .. காங்கிரஸ்.	20	305
9.	ஜனதா	8	80
10.	மக்கள் கட்சி.	3	39
11.	இந்திய யூனியன் .. .. முஸ்லீம் லீக்	2	10
12.	குடியரசு கட்சி.	3	30
	ஆக மொத்தம்	412	6,407

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வினாக்கள் :—

விடையளிக்கப் பெற்ற குறுகிய கால வினாக்கள்	11
உடுக்குறியிட்ட வினாக்கள்	641
அனுமதிக்கப் பெற்ற மொத்த துணை வினாக்கள்	1,903
உடுக்குறியிடாத வினாக்கள்	254

130 உறுப்பினர்களின் வினாக்களுக்கு விடைகள் அளிக்கப் பெற்றுள்ளன.

18 உறுப்பினர்களது வினாக்கள் 10—க்கும் மேல் பதிலளிக்கப் பெற்றுள்ளன.

ஒரு பொருள் குறித்து பல உறுப்பினர்களால் கேட்கப் பெற்ற வினாக்கள் 25

(வினாக்கள்—கட்சிவாரியாக விவரம்)

அ.இ.அ.தி.மு.க.	279
தி.மு.க.	97
காங் (இ)	74
கம்யூ. (மா)	92
கம்யூ.	42
த. நா. கா. கா.	18
கா. கா. தே. கா.	23
இ. யூ. முஸ்லீம் லீக்	6
ஜனதா	5
அகில இந்திய பார்வர்ட் பிளாக்	4
குடியரசுக் கட்சி	1
	641

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

வரப்பெற்றவை ..	768
அனுமதி மறுக்கப் பெற்றவை ..	439
அனுமதிக்கப் பெற்றவை ..	329
துறைகளில் இருந்து பதில் வராதவை ..	84
பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை ..	245
	(65—பொருள் குறித்து)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ச்திலைட்புத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை .. மொத்தம்	380
தள்ளப் பெற்றவை	152
கவன ஈர்ப்பாக மாற்றப் பெற்றவை	60
பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை	119
நிலுவையில் உள்ளது	49

சட்ட முன்வடிவுகள்—

வரப்பெற்றவை	58
நிறைவேற்றப் பெற்றவை	45
குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெற்றவை	3

தனியார் அலுவல்கள்—

வரப்பெற்ற தனித் தீர்மானங்கள்	23
அனுமதிக்கப் பெற்றவை	21

உரிமை மீறல் பிரச்சினை—

கொடுக்கப் பெற்ற அறிவிப்புகள்	37
இசைவு மறுக்கப் பெற்றவை	23
அவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை	11
உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை	3
தீர்ப்பளிக்கப் பெற்றவை	6

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்—

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்	74
ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்	149

பார்வையாளர் மாடங்கள்—

அனுமதிக்கப் பெற்றவர்கள்	43,069
ஆண்கள்	28,532
பெண்கள்	3,112
பேரவைத் தலைவர் மாடம்	11,425

நூலகம்—

மொத்தமுள்ள நூல்கள்	30,000—க்கு மேற்பட்டவை
வருகை தந்திருப்பவர்கள்	740

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Legis–Alert என்பதாக கட்டுரை தொகுப்பு—இதுவரை 12 இதழ்களாக சுமார் 600 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலிருந்து பொருள்வாரியாக தொகுக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதனை பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

பேரவை நடவடிக்கைகள் மட்டும் தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பக்கங்கள் 8,294 பக்கங்கள்

பேரவை கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்துள்ள உறுப்பினர்கள் 5

1. திரு. நா. குலசேகர பாண்டியன்

2. திரு. ஆர். சுக்கரபாணி

3. திரு. இரா. சண்முகம்

4. திரு. வி. சி. சண்முகம்

5. திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்

பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வானொலி, தொலைக்காட்சி நிலையத்தினருக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்த சட்டமன்றப் பேரவைச் செயலர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலர்ளர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்போது தீர்மானத்தை மொழிவார்கள்.

7. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

இ. நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுவது:—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 41 நாட்களாக நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் நடைபெற்று சிறப்பாக முடிந்திருக்கிறது.